
# இம்சையற்ற சிறுவர் வாழ்வு



பாடசாலைச் சூழலிலிருந்து
துன்புறுத்தலை ஒழிப்போம்

ஜனசங்சதய

# இம்சையற்ற சிறுவர் வாழ்வு

பாடசாலைச் சூழலிலிருந்து துன்புறுத்தலை ஒழிப்போம்

(சம்பவத் தொகுப்பு)

தமிழில்:
மொஹமட் ராஸூக்

வெளியீடு:
ஜனசங்சதய

| | |
|---|---|
| இம்சையற்ற சிறுவர் வாழ்வு | Imsaiyatra Siruvar Valvu |


| | |
|---|---|
| முதற் பதிப்பு- 2010 | -First Print |
| மொழி பெயர்ப்பு: மொஹமட் ராஸுக் | Translated By: Mohamed Rasook |
| கணனி அச்சமைப்பு: எஸ்.எஸ்.குமாரி | Type Setting S.S.Kumari |
| அட்டையமைப்பு: மேமன்கவி | Cover Designed By: Memonkavi |
| அனுசரணை: ஆசிய மனித உரிமைக் கமிஷன் | By Courtesy of : Asian Human Rights Commision |
| வெளியீடு ஜனசங்சதய 81/2 ஆதர் வீதியெஸ்மாவத பாணந்துறை | Published By: Janasansathaya 81/2 Arthur V Dias Mawatha Panandura |
| பெக்ஸ்/தொ.பே.: | T.P/FAX |

0382235191

| | |
|---|---|
| ஈமெயில் | e.mail |

manava@sltnet.lk

**ISBN: 978-955-1687-26-7**

# அறிமுகம்

2008ல் சட்டமும் அதனோடு தொடர்பு கொண்ட ஏனைய பகுதிகளையும் உள்ளடக்கி, 'இம்சையற்ற சிறுவர் வாழ்வு'- பாடசாலைச் சூழலிலிருந்து மாணவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை ஒழிப்போம் எனும் தலைப்பில் எமது முதலாவது நூலை சிங்களத்தில் வெளியிட்டோம்.

இரண்டாம் பதிப்பில் புதிய விடயங்களுடன் மொத்தம் 15 சம்பவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் தமிழ் மொழிபெயர்ப்பே இந்நூல். பாடசாலைகளில் தற்காலத்தில் மாணவர்களுக்கு எதிரான இம்சை நடவடிக்கைகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாக இருப்பது கல்விப் நிர்வாகத் துறையில் ஊழல், மோசடி, அநீதி போன்ற துர்நடத்தைகள் மேலிருந்து கீழ் நோக்கி பரவிச் சென்றுள்ளமையாகும். எந்தவொரு குற்றச் செயலையும் செய்துவிட்டு சட்டத்திலிருந்து தப்பி வாழ்வதற்கான சந்தர்ப்பம் எமது சமுதாயச் சூழலில் அதிகரித்துள்ளதென்பதை என வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

உங்கள் ஆதரவு எமது பணித் தொடரை நிச்சயமாக மேலும் துரிதப்படுத்தும்.

*ஜனசங்சதய*

*2010- மார்ச்- 20*

[illegible]

2008 [illegible]

[illegible]

2010- மார்ச்- 20

## உள்ளே......

01. பிரதமர் மகளிர் கல்லூரி- பாணந்துறை 01- 02

02. சென்ட் மேரிஸ் தேசிய பாடசாலை- அம்பாந்தோட்டை 03- 05

03. சென்ட் மேரிஸ் தேசிய பாடசாலை- அவிசாவலை 06- 12

04. சுமன கனிஷ்ட வித்தியாலயம்- நிவித்திகலை 13- 14

05. போம்புலய மஹா வித்தியாலயம்- (நவோதயா) களுத்துறை 15- 17

06. புலத்சிங்ஹல மத்திய கல்லூரி- புலத்சிங்ஹல 18- 24

07. ஸ்ரீ சுபூதி மஹா வித்தியாலயம்- பத்தரமுல்ல 25- 26

08. போம்புவல மஹா வித்தியாலம்- களுத்துறை 27- 30

09. மதீனா தேசிய பாடசாலை- சியம்பலாகஸ்கொடுவ 31- 33

10.சென் லூக் மஹா வித்தியாலயம்- இரத்தினபுரி 34- 35

11. ஸ்ரீ சுமன மஹா வித்தியாலயம்- இரத்தினபுரி 36- 37

12. கோனகஸ்தென்ன வித்தியாலயம்- பலாங்கொடை 38- 39

13. அலோஸியஸ் வித்தியாலயம்- இரத்தினபுரி 40- 41

14. கோன்வெவ கனிஷ்ட வித்தியாலயம்- குளியாப்பிட்டி 42- 44

15. றோயல் கல்லூரி- ஹொரண 45- 46

# 1. பிரதமர் மகளிர் கல்லூரி- பாணந்துறை

பதினாறு வயதுடைய அவள் 2006ம் ஆண்டு க. பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் ஒரு மாணவி. 2006.10.20ம் திகதி வழக்கம் போல் அவள் பாடசாலைக்குச் சென்றாள். வகுப்பாசிரியையான திருமதி ரோஹினியின் வேண்டுகோளுக்கிணங்க அவள் அதிபர் நன்தனி ஜயசுந்தரவைச் சந்திக்க அந்தக் காரியாலயத்துக்குச் சென்றாள். காரியாலயத்தில் வைத்து பல பேர் முன்நிலையில் அவளது கை, காலுக்குப் பிரம்பால் அடித்த அதிபர், "இனி அழகான ஒரு மிஸ் பாடசாலைக்கு வரமாட்டாள். மோசமான பிள்ளைகள் இருக்கிறார்கள்......" எனக் கூறி அவளை வெட்கப்படுத்தினார்.

இது சம்பந்தமாக மாணவியின் பெற்றோர் பாணந்துறைப் பொலீஸ் நிலையம், மனித உரிமை ஆணைக்குழு என்பவற்றில் முறையிட்டனர். இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின் போது இந்த மாணவி ஆசிரியையான நிலானி பொன்சேகாவின் மூலம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டிருப்பதும், அதன் காரணமாக அவள் கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்ததும் தெரிய வந்தது. ஒரு தடவை அவள் தற்கொலை செய்து கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சி பற்றியும் அறியக் கிடைத்தது.

இந்த அனைத்து விடயங்கள் பற்றியும் பெற்றோர் அதிபரை அறிவுறுத்தியுள்ளனர். அந்த அறிவுறுத்தல்களின் போது நிலானி ஆசிரியை அதிபரிடம் அடிவாங்கித் தருவதாக மாணவியை பயமுறுத்தியுள்ளதாகவும் அறியக் கிடைத்தது.

இதன் பிரகாரம் அதிபரான திருமதி நன்தனி ஜயசுந்தர மாணவியை அடித்துக் கஷ்டப்படுத்தி அவளது அடிப்படை உரிமையை மீறியுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழு, அதிபர் திருமதி நன்தனி ஜயசுந்தர இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் 11வது சரத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமையை மீறியுள்ளார் எனத் தீர்மானித்தது.

அதன்படி அதிபரான திருமதி நன்தனி ஜயசுந்தரவுக்கு மாணவியின் வங்கிக் கணக்கில் 1500/= ரூபா பணத்தை வைப்புச் செய்யுமாறு உத்தரவிட்டதோடு, ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொண்டு அது சம்பந்தமான அறிக்கையை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும் தீர்மானித்தது.

பாணந்துறை பிரதமர் மகளிர் கல்லூரி மேல் மாகாண சபையின் கீழ் பரிபாலிக்கப்படும் ஒரு பாடசாலையாகும். ஆகவே அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட வேண்டியது மேல் மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளருக்கே என எமது அமைப்பு மனித உரிமை ஆணைக்குழுவை அறிவுறுத்தியதோடு, அதன் ஒரு பிரதியை மாகாண சபை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கான விடயங்களையும் மேற் கொண்டது.

குறிப்பு:

இச் சம்பவம், அதாவது பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களை இம்சைப்படுத்தல் இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றச் செயல்களாகும். கல்விச் சுற்று நிருபப்படி பாரதூரமான ஒழுக்க மீறல்களாகும். எனினும் பொலீஸாரும், கல்வி அமைச்சின் பொறுப்பாளர்களும் இவற்றுக்கு எதிராக மேற்கொண்ட சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி இதுவரை எமக்கு எதுவும் அறியக் கிடைக்கவில்லை.

# 2 சென் மேரீஸ் தேசிய பாடசாலை- அம்பாந்தோட்டை

2008.02. 07ம் திகதி அப்பாடசாலையில் 11ம் ஆண்டில் கல்வி கற்கும் ஐந்து மாணவர்களுக்கு சாரீர ரீதியான தண்டனை வழங்கி, தூஷண வார்த்தைகளால் ஏசி அவர்களது பெற்றோர்கள் உட்பட ஏனைய மாணவ மாணவிகளின் முன் நிலையில் அவமானப்படுத்தி பாடசாலையில் இருந்தும் விலக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபரான திரு. நன்தவீர ரத்னாயக்கா என்பவர் வீ. பி. சந்ரா, லலிதா எனும் ஆசிரியைகளின் ஒத்துழைப்புடன் இச் சட்டவிரோதமான காரியத்தைச் செய்துள்ளார். இவ்வாறு மாணவிகளுக்குத் தண்டனை வழங்கக் காரணம் மேற்கூறப்பட்ட மாணவிகள் ஐவரின் காதல் தொடர்புகள் பகிரங்கமாதலே என்றும் கூறப்படுகிறது.

ஒரு மாணவியின் தாய் இச்சம்பவத்தை இவ்வாறு விளக்கினார். பகல் 12.15 மணியளவில் சென்ட் மேரீஸ் கல்லூரியில் கடமை புரியும் ஒரு ஆசிரியர் நான் வேலை செய்யும் இடத்துக்கு வந்து, அவசரமாகப் பாடசாலைக்குச் சென்று அதிபரைச் சந்திக்குமாறு வேண்டிக் கொண்டார். நான் பொறுப்பாளரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு உடனடியாகப் பாடசாலைக்குச் சென்றேன்.

அங்கு சென்று பார்க்கும் பொழுது எனது மகளும் இன்னும் நான்கு மாணவிகளும் சுவர்ப் பக்கம் முகங்களைத் திருப்பி வைத்துக் கொண்டு அழுது கொண்டிருப்பதைக் கண்டேன். அச்சந்தர்ப்பத்தில் இரண்டு

தாய்மாரும் ஒரு தந்தையும் காரியாலய சேவகர்களும், அதிபர் நன்தவீரவும், உதவி அதிபர்களான திருமதி லலிதா, சந்ரா போன்ற ஆசிரியைகளும் காரியாலயத்தில் இருந்தனர். அதிபர் கையில் பிரம்புடன் பித்துப் பிடித்தவர் போல் தூஷண வார்த்தைகளால் மாணவிகளைத் திட்டிக் கொண்டிருந்தார். இந்த ஐந்து மாணவிகளும் பாடசாலையில் படிக்கும் மாணவர்களுடன் வெளிப்படுத்திக் கொண்டுள்ள காதல் தொடர்பு அதிபருக்குத் தெரிய வந்துள்ளதாக சந்ரா என்ற ஆசிரியை கூறினார். அதிபர் கையிலிருந்த ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டித் தற்பொழுது மகளைப் பாடசாலையில் இருந்து விலக்கியுள்ளதாகவும், அவளை இன்னொரு பாடசாலையில் சேர்க்க முடிந்தவாறு விடுகைப் பத்திரத்தின் மீதமாக உள்ள பகுதியை நிரப்புமாறும், மகளைப் பாடசாலையில் இருந்து விலக்கிக் கொள்ள விரும்புவதாக ஒரு கடிதத்தை எழுதித் தருமாறும், வேண்டிக் கொண்டார். நானும் ஏனைய பெற்றோரும் பயந்து விடுகைப் பத்திரங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

பின்னர் நான் அந்த சட்ட விரோதமான அசாதாரண நடவடிக்கை பற்றி மனித உரிமை ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சு என்பவற்றுக்கு முறைப்பாடு செய்தேன்.

கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் அவரது CA/1/6/8/1/56/NS 125 இலக்கம் கொண்ட 2006.03.01ம் திகதி கடிதத்தின் மூலம் இந்த ஐந்து மாணவிகளையும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு பணித்திருந்தார். அவர்களைப் பாடசாலையில் சேர்த்துக் கொண்டு அது பற்றிய ஒரு தெளிவான அறிக்கையை அமைச்சுக்கு அனுபபி வைக்குமாறும் வேண்டிக் கொண்டார். அதிபர் நன்தவீர ரத்னாயக்கா அக்கடிதத்தைக் குப்பையில் எறிந்தார்.

பெற்றோர்களுள் மூவர் தமது பிள்ளைகளுக்கு நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக அடிப்படை உரிமை பற்றிய மூன்று வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அவற்றின் இலக்கங்கள் SCFR 104/ 2006- /2006 மற்றும் 106/2006 என்பவையாகும்.

மனுதாரர்கள் சார்பாக சட்டத்தரணி கல்யானன்த திரனகம முன் நின்றார். சட்டமா அதிபர் சார்பாக ஹர்ஷிகா டி சில்வா முன் நின்றார்.

சட்டமா அதிபர் சார்பாக முன் நின்ற அரச சட்டத்தரணி பாடசாலை விளையாட்டு விழா முடிவடைந்தவுடன் மாணவிகள் ஐவரையும் பாட

சாலையில் சேர்த்துக் கொள்வதாக அதிபர் வாக்குறுதி அளித்துள்ளார் என நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

விளையாட்டு விழா முடிவடைந்து மாணவிகள் பாடசாலைக்குச் சென்ற போது அதிபர் அவர்களைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ள மறுத்துள் ளார். பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவிகள் ஐவரையும் பாடசாலையில் சேர்த்துக் கொண்டுள்ளார்.

லலிதா, மாலினி, சந்ரா எனும் ஆசிரியைகள் அந்த உத்தரவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து அந்த மாணவிகள் வகுப்புக்குப் பாடங்கள் நடாத்த மறுத்துள்ளனர். பரிபாலன ரீதியான சலுகைகள் கிடைத்துள்ள மையால் அடிப்படை உரிமை சம்பந்தமான வழக்கை அகற்றிக் கொள்வ தாக மனுதாரர்கள் சார்பு சட்டத்தரணி உயர் நீதிமன்றத்துக்கு அறிவித் தார். அதற்குச் சந்தர்ப்பமளித்து உயர் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

மாணவிகள் பாடசாலையில் சேர்க்கப்பட்டாலும் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அவமானப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை ஆசிரியர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. பாடசாலை வாழ்க்கை மீது மாணவிகளின் மனங்களில் அவர்கள் கசப்பை ஏற்படுத்தினர். பொறுக்க முடியாத சந்தர்ப்பத்தில் ஒரு மாணவி விஷம் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளாள். மனித உரிமை ஆணைக்குழு விசாரணையைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பு:

தமது பிள்ளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதி, அசாதாரணம் என்பவற்றுக்கு எதிராக தாய்மார்கள் இருவர் மனித உரிமை ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சு என்பவற்றுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அதிபரின் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்குச் சந்தர்ப்பமளித்து பிள்ளைகளைப் பிரச்சினைக்குள்ளாக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்ளாமையின் மூலம் எதிர்காலச் சந்ததியனருக்கு ஆதர்ஷமாக இருப்பது எல்லாவிதமான சட்ட விரோதமான காரியங்களையும் செய்து விட்டுப் பாதுகாப்புடன் இருக்க முடியும் என்ற செய்தியை அல்லவா?

# 3. சென் மேரீஸ் கல்லூரி- அவிசாவலை

14வயதுடைய அவள் ஒன்பதாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். 2006.10.27ம் திகதி வகுப்பைச் சுத்திகரிக்கும் நடவடிக்கையில் அவளுக்கு ஈடுபடவேண்டியிருந்தது. அதன்படி அன்று வகுப்பைக் கூட்டிச் சுத்தம் செய்த அவள் குப்பையை வெளியே கொட்டிவிட்டு வகுப்புக்கு வரும்போது வகுப்பாசிரியையான நயனகாந்தி குமாரகேயும் உபுல் சாந்த என்ற இன்னொரு ஆசிரியரும் அவளது புத்தகப் பையைத் திறந்து அதனுள் இருந்த குறிப்புப் புத்தகத்தை எடுத்து வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அதில் ஒரு பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. "இன்று எனது சகோதரனைப் போன்ற இன்னொரு சகோதரனைச் சந்தித்தேன்"

அக்குறிப்பை வாசித்து மனதைக் குழப்பிக் கொண்ட குமாரகே ஆசிரியை "யார் அந்தச் சகோதரன்?" என அவளை அடித்துத் துன்புறுத்தி, அவமானப்படுத்தி கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். ஆசிரியையின் நோக்கம் அவள் ஒரு இளைஞனுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளாள் என அவளை ஏற்க வைப்பதேயாகும். பின்பு மறுநாள் பெற்றோருடன் பாடசாலைக்கு வருமாறு உத்தவிட்டாள்.

வேதனையுடனும் வெட்கத்துடனும் தலையை மேசை மீது வைத்து அழுது கொண்டிருந்த அவளுக்கு, மீண்டும் அந்த ஆசிரியை அவளுக்கு அடித்து விட்டுப் பாடம் முடிவடைய முன்பு வகுப்பை விட்டு வெளியேறிச் சென்றார்.

வேதனை, வெட்கம் தாளாமல் அந்த மாணவி வகுப்பு அமைந்துள்ள மூன்றாம் மாடியிலிருந்து நிலத்தில் குதித்தாள்.

இது பற்றி அறிந்த மாணவியின் தந்தை மனித உரிமை ஆணைக் குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலீஸ் நிலையம் என்பவற்றில் இது சம்பந்தமாக முறைப்பாடு செய்தார். அவிசாவலைப் பொலீஸார் சம்பவத்தை விசாரணை செய்து அவிசாவலை நீதிமன்றத் துக்கு அறிவித்தனர். அது A.B 9854/2007 எனும் இலக்கத்தின் கீழ் பாடசாலையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் தொடர்பாக என்றும் 1995 இலக்கம் 22 தண்டனைச் சட்டத் திருத்த மசோதா 3081A சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை இன்னும் முடிவடையவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக:

பாதுகாப்பு நிலைமையின் கீழ் பள்ளி மாணவர்களின் புத்தகப் பைகளை பரிசோதனை செய்யும் 'செக்கியூரிட்டி' பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றிருந்தால் அது அவர்களுடைய கடமையென்றே கூறவேண்டும். எனினும் மாணவர்களின் புத்தகப் பைகளைப் பரிசோதனை செய்யும் உரிமை அவர்களுக்கு இருந்தாலும் குறிப்புப் புத்தகத்தை வாசிக்கும் உரிமையை அவர்களுக்கு யார் வழங்கியது?

அத்துடன் நின்றுவிடாமல் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு குறிப்பை அடிப்படையாக வைத்துத் தனிப்பட்ட காதல் தொடர்புகள் சம்பந்தமாக கேள்விகளைக் கேட்கும் உரிமை இவர்களுக்கு எப்படிக் கிடைத்தது?

ஒரு பொலீஸ் அதிகாரியால் கூடச் செய்ய முடியாதவாறு துன்புறுத்தி, அவமானப்படுத்தி, கேள்விகளைக் கேட்கும், அக்கேள்விகளுக்குத் தமக்குத் தேவையான பதிலைப் பெற்றுக் கொள்ளும் உரிமை ஆசிரியர்களுக்கு உண்டா? என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான சத்திய வாக்கு மூலங்களை வழங்கியுள்ள அதிபரினதும் ஆசிரியர்களினதும் முயற்சியாக இருப்பது அவளை ஒரு நடத்தை கெட்ட மாணவியாக அறிமுகப்படுத்துவதும், குற்றவாளிகளான ஆசிரியர்களின் நோக்கம் தூய்மையானது எனச் சுட்டிக்காட்ட முயற்சிப்பதுமேயாகும்.

**குறிப்பு:**

ஒரு மாணவி தற்கொலை செய்து கொள்ளும் பயங்கரமான நிலைக்குத் தள்ளப்படல் ஒரு கொலைக் குற்றத்துக்குச் சமமானதாகும். வளர்ந்தவர்களும்......ஏன் ஒரு மாணவனுக்கும் கூட, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் உண்டு என்பது பற்றி அறியாத ஆசிரியர்களால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லையென்றே கூற வேண்டும்.

ஒழுக்கம், நாகரிகம் என்பது சட்டத்தை கௌரவிப்பதும், சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதுமேயாகும்.

*****

சிறுவர் உரிமைகளை மீறும் அல்லது அவற்றை மீறும்படியான 'ஒழுக்க' நெறிகளை வகுக்கும் உரிமை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இல்லையென்றே கூறவேண்டும். அவர்கள் செய்வது ஒழுக்க விரோத அநாகரிகமான நடவடிக்கைகளேயாகும்.

மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின் முடிவில் ஆசிரியர்க்கு 25.000/= ரூபா நஷ்டஈட்டைச் செலுத்துமாறு ஆசிரியருக்கு உத்தரவிட்டது.

அவளது HRC/570/07 முறைப்பாடு தொடர்பாக மனிதஉரிமை ஆணைக்குழு 2008.07.20ம் திகதி வெளியிட்ட சிபார்சு வருமாறு:

**பிரதிவாதிகள்:**

01 என். ஏ. அனுஜா குமாரகே.
சென் மேரீஸ் கல்லூரி
அவிசாவலை.

02. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
76, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு- 07.

03. பொலீஸ் அதிபர்
பொலீஸ் நிலையம்
அவிசாவலை.

04. அதிபர்
சென் மேரீஸ் கல்லூரி
அவிசாவலை.

முறைப்பாட்டு இலக்கம் H. R. C/570/07.

மேற் கூறப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணை அதிகாரியின் அறிக்கையின் ஒரு பிரதி இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

01. இது தொடர்பான அறிக்கையை மற்றும் தரப்பினரால் முன் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய்ந்து பார்த்ததன் பின் அவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது மற்றும் 12(1) சரத்துக்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள வாதியின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தீர்மானிக்கின்றது.

02. அதன்படி கீழ்க்காணும் படியாக செயற்படுமாறு சிபார்சு செய்கின்றது.

(அ) விசாரணை அதிகாரியால் 25.000 ரூபா நஷ்டஈட்டைச் செலுத்துமாறு உத்தரவிடத் தீர்மானிக்கப்பட்டது. முதலாவது பிரதிவாதி யால் இந்த நஷ்டஈடு செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) மாகாண கல்விப் பணிப்பாளரும், அரச சேவை ஆணைக்குழுவும் இது சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும்.

மேற் கூறப்பட்ட சிபார்சை நிறைவேற்றுதல் தொடர்பான அறிக்கையை 2008.08.20ம் திகதிக்கு முன்பு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு 1996 இலக்கம் 21 கொண்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழுச் சட்டத்தின் 15வது சரத்தின் பிரகாரம் அறியத் தருகிறோம்.

**ஆணையாளர்,**
**மனித உரிமை ஆணைக்குழு,**

**நிமல் புஞ்சிஹேவா,**
**மேலதிக செயலாளர் (சட்டம்)**
**மனித உரிமை ஆணைக்குழு**

**இச்சிபார்சை அடிப்படையாகக் கொண்ட ஆய்வறிக்கையின் கடைசி அத்தியாயத்தில் கீழ்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

முதலாவது பிரதிவாதியால் முன்வைக்கப்பட்டுள்ள 2007.09.18ம்

திகதி சத்திய வாக்குமூலத்தின் உள்ளடக்கத்திற்கமைய, அசாதாரணத்துக்குள்ளாகியுள்ள யுவதியால் முன்வைக்கப்பட்டுள்ள 2007.08.05ம் திகதி சத்திய வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளும் தனிப்பட்ட அறிவு தனக்கு இல்லையென்று கூறியுள்ளார். இந்த யுவதி தன் சத்தியக் கடிதத்தை 2007.08.15ம் திகதி எழுதியுள் ளாள். அவளது வாக்குமூலத்தில் ஒரு இளைஞனுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள தொடர்பு பற்றி விசாரித்தபோது, அப்பொழுது அந்த யுவதி கோபத்தோடு செயற்பட்டதாகவும் அந்த முரட்டுத்தனமான போக்கின் காரணமாக அவளது தோள் மீது ஓரளவு பலமாகத் தட்டினேன் என்றும் கூறியுள்ளாள். ஆசிரியையின் இந்த வாக்குமூலத்தின் மூலம் அவள் மாணவியின் காதல் தொடர்பை எவ்வாறு அறிந்து கொண்டார் என்பது பற்றியோ குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தது என்ன என்பது பற்றியோ எதுவும் கூறவில்லை. அவள் செய்திருப்பது ஒரு தாயைப் போல் புத்திமதி கூறித் தோள்மீது தட்டியது மாத்திரமே. ஆசிரியை இவற்றுக்கு அடுத்தபடியாக இதற்கு முன்னரும் இன்னொரு காதல் தொடர்புச் சம்பவம் சம்பந்தமாக இந்த யுவதிக்குப் புத்திமதி கூறியுள்ளதாகவும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு மாணவியைத் தான் தண்டித்ததில்லையென்றம் கூறியுள்ளார். அந்த ஆசிரியை சேவை செய்யும் பாடசாலையின் அதிபரான திரு மெண்டிஸ் தனது சத்திய வாக்குமூலத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளார்.

இது கண்ணால் காணாத ஒரு சந்தர்ப்பம் பற்றிய விபரிப்பேயாகும். இச்சம்பவம் நடந்த நாளன்று அவர் பாடசாலையில் இருக்கவில்லை. (2007.09.20 திகதி பொலீஸ் அறிக்கையைப் பார்க்க) ஆதலால் அவர் முன் வைக்கும் விடயங்கள் முதலாவது பிரதிவாதியால் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்தும் அவரைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு முயற்சி மட்டுமேயாகும். இதற்கு அடுத்தபடியாக ஆசிரியை சார்பாக மாணவர்களும் ஆசிரியர் குழு உறுப்பினர்களும் முன் வைக்கும் கருத்துக்கள் பக்க சார்பானது எனக் கூறப்படுவதோடு, அந்த ஆவணங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படக் காரணம் அதன் மூலம் ஒரு மாணவியோ அல்லது ஒரு ஆசிரியரோ பொலீஸாருக்கு எந்த விதமான வாக்குமூலத்தையும் வழங்கி இல்லாமையால் அவற்றின் உண்மை நிலைமை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற காரணத்தினாலாகும்.

அசாதாரணத்துக்குள்ளான மாணவியை முதலாவது பிரதிவாதி தாக்கியிருப்பது சாட்சிகளின் மூலம் உறுதியாகின்றது. இது ஒரு மாணவியின் புத்தகப் பையில் இருந்து முதலாவது பிரதிவாதியால்

வெளியே எடுக்கப்பட்ட ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு குறிப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலாகும். அக்குறிப்பு அந்த மாணவியின் காதல் தொடர்பை மையமாக வைத்து எழுதப்பட்டதொன்றெனத் தீர்மானித்த ஆசிரியை அதனை ஏற்றுக் கொள்ளுமாறு மாணவியை வற்புறுத்தியுள்ளதோடு, ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அந்த மாணவியை இரண்டு தடவை தாக்கியுள்ளார். இவ்வாறு அடித்து அவமானப்படுத்தல் காரணமாக இலகுவில் தூண்ட முடிந்த உணர்வுகளுடன் வாழும் 14 வயது யுவதியை மேல் மாடியிலிருந்து கீழே குதிப்பதற்கான சந்தர்ப்பத்தை முதலாவது பிரதிவாதி உருவாக்கியிருப்பதோடு அதன் காரணமாக அவளது உயிருக்குக் கூட ஆபத்து நேரச் சந்தர்ப்பம் இருந்தது எனத் தீர்மானிக்க முடிகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களின் மூலம் முதலாவது பிரதிவாதி 14வயது டைய ஒரு யுவதிக்கு செய்யத் தகாத ஒரு குற்றத்தைச் செய்துள்ளார் என்பது தெளிவாகவே உறுதியாகும் போது, அதிபரும் ஆசிரியர்களும் அக்குற்றத்தை அந்த மாணவி மீது சுமத்தி தாம் சுற்றவாளிகளெனக் காட்டி நிற்க முயற்சி செய்கின்றனர். மாணவி தனது காதல் தொடர்புச் சம்பவத்தை நிராகரிக்கும் போது அதனை ஏற்றுக் கொள்ள ஆசிரியை மறுப்பதன் மூலம் பாரதூரமான ஒரு நிலைமையை அவர் தோற்றுவித்துள்ளார். ஆசிரியையின் அந்த நடவடிக்கை காரணமாக மாணவியின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, மாணவியினதும் பெற்றோரினதும் மனங்களில் ஏற்பட்டுள்ள வேதனை நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

இரண்டாவது பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள கல்விப் பணிப்பாளர் 2007.07.04 ம் திகதி ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையின் மூலம் தெளிவாவது அசாதாரணத்துக்குள்ளான யுவதியின் புத்தகப் பையை சோதனை செய்யும் போது ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு குறிப்பின் காரணமாக ஆசிரியை (01வது பிரதிவாதி) மாணவியை எச்சரித்துள்ளார் என்பதும் அதனை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அவளைத் தண்டித்துள்ளார் என்பதுமாகும். இதற்குக் காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது ஒரு இள வயது யுவதியின் மன நிலையைப் புரிந்த கொள்ளாமல் செயற்பட்டுள்ளார் என்பதாகும். (ஏ இணைப்பு) இரண்டாம் பிரதிவாதியின் வாக்குமூலத்தின் மூலம் தெளிவாகியுள்ள விடயங்களையும், முன்னர்

குறிப்பிடப்பட்ட அனைத்துச் சம்பவங்களையும் ஒன்று திரட்டி ஆராய்ந்து பார்க்கும் போது மறுக்க முடியாத விடயமாக இருப்பது முதலாவது பிரதிவாதி 14 வயதுடைய உறவுக்கார மாணவியின் காதல் தொடர்பு பற்றி தெளிவான, அர்த்தம் கூறப்படாத ஒரு குறிப்பை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியையின் மனரீதியான குறைபாடு காரணமாக அந்த மாணவியை அடித்து ஏனைய மாணவர்களின் முன் நிலையில் அவமானத்துக்குள்ளாக்கி வெட்கப்படுத்துவதன் காரணமாக அவள் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கில் மூன்றாம் மாடியில் இருந்து கீழே குதித்தாள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி உறுதியாகியுள்ளது என்பதாகும்.

இச்சம்பவம் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, வலயக் கல்விக் காரியாலயம் மற்றும் பொலீஸ் நிலையம் என்பவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ளதோடு அந்த நிலையங்களில் இது சம்பந்தமாக அடுத்த நடவடிக்கைகள் பற்றி இதுவரை எமக்கு எதுவும் அறிவிக்கப்பட வில்லை. எவ்வாறாயினும் முதலாவது வாதியின் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது மற்றும் 12(1) வது சரத்தின் பிரகாரம் மீறப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது. பிரச்சினைக்குள்ளான மாணவி பாடசாலையில் இருந்தும் விலகி இன்னொரு பாடசாலையில் கல்வி கற்பதாக அறியக் கிடைத்துள்ளது. அத்துடன் B இணைப்பின் பிரகாரம் முதலாவது பிரதிவாதி இன்னொரு பாடசாலைக்கு எச்சரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் பிரகாரம் முதலாவது பிரதிவாதியின் நடவடிக்கைகள் காரணமாக ஓரளவு காலத்துக்கேனும் அவளது ஆசிரியர் பணியை இடைநிறுத்தி கல்விக் காரியாலயத்தில் பணிபுரிய வைக்கவும், அசாதாரணத்துக்குள்ளான வாதிக்கு 75.000 ரூபா நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கவும் ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டுமென சிபார்சு செய்தல் ஏற்றதாகுமென குறிப்பிடுகிறேன்.

மர்லின். பி.கயதுங்க.
ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி,
ஆலோசகர் மற்றும் ஆய்வு,
இலங்கை மனித உரிமை ஆணைக்குழு.

# பு சுமண கனிஷ்ட வித்தியாலயம்- நிவித்திகலை

அவனது வயது பதினொன்று. அவன் ஏழாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். 25.10.19ம் திகதி அப்பாடசாலையில் கடமை புரியும் சமன் இத்தமல்கொட என்ற ஆசிரியர் அவனை அடித்தார். இது சம்பந்தமாக அந்த மாணவன் இவ்வாறு கூறினான்.

"நான் இன்னொரு மாணவனுடன் தண்ணீர் பம்ப் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். இதைக் கண்ட ஆசிரியர் என்னிடம் வந்து அணிந்து கொண்டிருக்கும் மூக்குக் கண்ணாடியை அகற்றுமாறு கட்டளையிட்டார். நான் கண்ணாடியை அகற்றும் பொழுது ஆசிரியர் எனது தலைப் பின்புறமாக ஓங்கி அடித்தார். இதன் காரணமாக நான் வீசி எறியப்பட்டேன் அப்பொழுது எனது மூக்கு பக்கத்தில் உள்ள மேசை மீது பலமாக மோதுண்டதால் மூக்கு எலும்புகள் முறிந்தன. தற்பொழுது நான் இரண்டு சத்திரசிகிச்சைக்கு உட்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இன்னொரு சத்திர சிகிச்சையைச் செய்ய வேண்டுமென வைத்திய நிபுணர்கள் கூறியுள்ளனர். இச்சத்திர சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் செய்வதாக இருந்தால் ஐம்பதினாயிரம் ரூபா செலவாகுமென டாக்டர் கூறினார். குறிப்பிட்ட அவன் அந்தளவு பணத்தை எனது பெற்றோரால் செலவழிக்க முடியாத காரணத்தால் அரசாங்க வைத்தியசாலையில் பெயரைப் பதிவு செய்து சந்தர்ப்பம் கிடைக்கும் வரை காத்திருக்கிறேன்."

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக நிவித்திகலைப் பொலீஸார் இத்தமல் கொட ஆசிரியருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் 8/ 1775/05 இலக்கத்தின் கீழ் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். 2006.02.04ம் திகதி நிவித்திகலை பொலீஸார் வழக்கு சம்பந்தமான அறிக்கையை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்க நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர்.

2006.02.25ம் திகதி நிவிதிகலை பொலீஸார் கடிதக் கோவையைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்தனர்.

2008. 05. 06ம் திகதி இறுதித் தடவையாக அழைக்கப்பட்ட சந்தர்ப் பத்தில் நிவித்திகலைப் பொலீஸார் சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லையென நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

**மனித உரிமை ஆணைக்குழுவின் சிபார்சு.**

இது சம்பந்தமாக மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின் சிபார்சு 2009.03. 31ம் திகதி வெளியிடப்பட்டது.

சமன் இத்தமல்கொட அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகக் குறிப்பிட்ட ஆணைக்குழு,

01. சமன் இத்தமல்கொட ஆசிரியர் மாணவனுக்கு ஐயாயிரம் ரூபா நஷ்டஈட்டை வழங்க வேண்டுமென சிபார்சு செய்துள்ளது.

02. மேற் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக சமன் இத்தமல்கொடவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொண்டு 2009.05.15ம் திகதிக்கு முன்னர் அது சம்பந்தமானஅறிக்கையை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சுப் பொறுப்பாளருக்கு தெரிவிக்குமாறு உத்தரவிட்டது.

**கவனத்திற் கொள்ளவும்**

மனித உரிமை ஆணைக்குழுவின் சிபார்சுக்கு எதிராக சமன் இத்தமல்கொட ஆசிரியர் மேல்முறையீடு செய்துள்ளார்.

## 5. போம்புவல மஹா வித்தியாலயம் (நவோதயா) - களுத்துறை.

2006 ஜனவரி 31ம் திகதி பாடசாலையின் இல்ல விளையாட்டு விழா நடைபெற்றது. விழா இறுதியில் நடைபெறவுள்ள மாணவர் அணிவகுப்பில் அவனும் கலந்து கொள்ள இருந்தான்.

மாணவர்கள் அணிவகுப்புக்கு ஆயத்தமாக இருக்கும் வேளையில் அன்றைய விளையாட்டு ஆசிரியராக இருந்த கே.டி. ஸி. ரேணுக அவனிடம் வந்து அவனது காதைத் திருகிக் கன்னத்தில் அறைந்தார்.

இச்சம்பவம் பற்றி அச்சந்தர்ப்பத்தில் இன்னொரு மாணவன் இவ்வாறு கூறினான்.

"அணிவகுப்பு ஊர்வலத்துக்காக வரிசையைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவன் அங்கும் இங்கும் பார்ப்பதை நான் கண்டேன். இதனைக் கண்ட ரேணுக அவனிடம் வந்து "என்ன பார்க்கிறாய்?" என வினவினார். அவன் "ஒன்றுமில்லை"யென்றான். அப்பொழுது ரேணுக ஸேர் "நாயே! நான் உன்னை என்ன செய்கிறேன் பார்?" எனக் கூறியவாறு அவனது ஒரு பக்கக் கன்னத்தில் பல தடவைகள் அறைந்தார். மறுபக்கம் திரும்பும் போது அந்தப் பக்கக் கன்னத்திலும் அறைந்தார். சில நாட்கள் கழித்து இச்சம்பவம் பற்றி அதிபர் என்னிடம் வினவினார். நான் நடந்தவற்றைக் கூறினேன். அதற்கு அதிபர் "அப்படிக் கூற வேண்டாம். கையில் இருந்த இறப்பர்க் காப்பை

அகற்றுமாறு கூறிக் காதைத் திருகினார்" என்று கூறுமாறு எனக்கு ஆலோசனை வழங்கியதோடு அவ்வாறு ஒரு கடிதத்தை எழுதித் தருமாறும் வேண்டிக் கொண்டார். நான் பயந்து அக் கடிதத்தை எழுதி அதிபரிடம் கொடுத்தேன்."

அத் தாக்குதல் காரணமாகப் பாரதூரமான காயங்களுக்கு உட்பட்ட அவனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டி நேர்ந்தது.

இச்சம்பவம் தொடர்பாக ஆஸ்பத்திரிப் பொலீஸார் அவனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து அதனை நீதிமன்ற வைத்திய அறிக்கையாக முன் வைத்தனர். மாணவன் இச்சம்பவம் பற்றிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தான்.

அந்த முறைப்பாட்டுக்கமைய இரண்டு சார்பினரும் 27.02.07ம் திகதி பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர். பொலீஸ் நிலையத்தில் ஆசிரியர் ஐம்பதினாயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொடுத்து மேலும் ஒரு இலட்சம் ரூபா முப்பது நாட்களில் செலுத்துவதாகப் பொலீஸாரிடம் வாக்குறுதியளித்தார்.

இதற்கிடையில் அதிபரான திரு ஆரியதாச சில்வா சம்பவம் தொடர்பாக பொய் வாக்குமூலங்களை மாணவர்களிடம் பெற்றுக் கொள்வதாக அறியக் கிடைத்தது. இன்னும் சிலர் சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல வேண்டாமென வேண்டிக் கொண்டனர். அவர்களுள் களுத்துறை வலயக் கல்விப் பணிப்பாளரும் ஒருவராவார்.

பொலீஸாரிடம் ஒரு லட்சம் ரூபா வழங்குவதாகக் கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்படப் போவதில்லை என்ற செய்தி பரவத் தொடங்கியது. இந்த நிலையில் மாணவனின் தந்தை தனது மகன் சித்திரவதைக்கு உள்ளாக்கல் உட்பட அவமானப்படுத்தல் என்பவற்றுக்கு எதிராக ஒரு வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

உயர் நீதிமன்றத்தின் முன் நின்ற ரேணுக ஆசிரியர் தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தந்தை ஆசிரியரின் வேண்டுதலை ஏற்றுக் கொண்டார். எந்தவிதமான நஷ்டஈட்டையும் பெற்றுக் கொள்ளாமல் ஆசிரியரை மன்னிக்கவும், குற்ற

வழக்கை அகற்றிக் கொள்ளவும் இணக்கம் தெரிவித்தார். ஆசிரியர் தான் செய்தது குற்றமென நீதிமன்றத்தின் முன் ஏற்றுக் கொண்டார்.

**குறிப்பு:**

தன்னை விடப் பலம் குறைந்த, வயது குறைந்த எவ்வித அதிகாரமும் இல்லாத அப்பாவி மக்களைத் தாக்குவதை வீரச் செயலாகக் கொள்ளும் போர் வீரர்கள் எம்மிடையே அதிகம் பேர் உள்ளனர். அவர்களுள் சில ஆசிரியர்களும் அடங்குவர். கே. பீ. ஸி. ரேணுக என்பவர் அதுபோன்ற ஒரு ஆசிரியரே. அதுபோன்ற கீழ்த்தரமான நடவடிக்கைகளைத் தைரியமாக எதிர்த்து நிற்கும்பொழுது அப்போர் வீரர்கள் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கோருவதும் சாதாரணமான சம்பவங்களே. மேற்கூறப்பட்ட சம்பவம் அதற்கு நல்லதொரு உதாரணமாகும். அதுவும் சாதாரணமான ஒரு நிலையே. இந்த முன்னுதாரணத்தை எதிர்காலச் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுத்தல் எமது கடமையல்லவா?

# 6. புலத்சிங்ஹல மத்திய கல்லூரி

அவனது வயது பதினாறு. அவன் பதினோராம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். 2004 ஜூலை மாதம் 19-20ம் திகதிகளில் இப்பாடசாலையின் ஆசிரியர்களான மஞ்சுலா வடவல, ரணவம ஆராச்சிகே, தொன் விஜேபால மற்றும் மத்துமலாகே தொன் ஜயசிரி என்பவர்களின் தாக்குதலுக்கு உட்பட்டு சித்திரவதை செய்யப்படல் சம்பந்தமான அவனது வாக்குமூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

2004.ஜூலை மாதம் 19ம் திகதி காலை 8.00 மணியளவில், பாடசாலை ஆரம்பமாகும் வேளையில் நான் வகுப்புக்குச் சென்றேன். பகல் 2.00 மணிக்குப் பாடசாலை முடிவடைந்து நான் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது ஹொரண- புலத்சிங்ஹல சந்தியில், புலத்சிங் ஹல பிரதேச செயலகத்துக்கு முன்னால் எனது பாடசாலை ஆசிரியரான திரு தயானந்த அவர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து என் பக்கமாக நிறுத்தினார். சைக்கிளின் பின்புற ஆசனத்தில் பிரியாவதி ஆசிரியை அமர்ந்திருந்தார். “கையிலுள்ள புத்தகப் பையைத் தா” எனக் கூறிய ஆசிரியை அதை வாங்கிக் கொண்டு “காரியாலயத்துக்கு வா” எனக் கூறியவாறு திரும்பவும் பாடசாலைக்குச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு நான் அவசரமாக அதிபரின் காரியாலயத்துக் குச் சென்றேன். அங்கு தயானந்த, பிரியாவதி, விஜேபால போன்ற ஆசிரியர்களும் இருந்தனர். என்னைக் கண்டவுடன் விஜேபால ஆசிரியர் “இந்தப் பக்கக் கண்ணாடி உனது புத்தகப் பைக்குள் எப்படி வந்தது?” என ஒரு கண்ணாடியைக் காட்டி எனது வலது காதின் பக்கம் பலமாக அறைந்தார். நான் “தெரியாது” எனக் கூறினேன். “உனக்குத் தெரியாமல்

இருக்க முடியாது" எனக் கூறிய அவர் மீண்டும் எனது தலையின் பின்புறமாக திரும்பவும் ஓங்கி இரண்டு தடவைகள் அடித்தார். திரும்பவும் அடிக்கத் தயாராகும் போது பயந்த நான் "பொறுக்கி எடுத்தேன்" எனக் கூறினேன். "நீ களவு செய்யாவிட்டால் நாளைக்குப் பயமில்லாமல் பாட சாலைக்கு வருவாய் அல்லவா? சரி வீட்டுக்குப் போய் நாளை பாட சாலைக்கு வா" எனக் கூறினார். நான் புத்தகப் பையை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றேன். வீட்டுக்குச் சென்றவுடன் எனது தலை நோவெ டுக்கத் தொடங்கியது. இருந்தாலும் அடி வாங்கிய சம்பவத்தை அம்மாவி டம் கூறாமல் பனடோல் வாங்கிச் சாப்பிட்டேன்.

மறுநாள் 2004. 07.20ம் திகதி வழக்கம் போல் குறிப்பிட்ட நேரத்தில் பாடசாலைக்குச் சென்றேன். அன்று ஒரு செவ்வாய்க்கிழமை நாள். நான் காலைக் கூட்டத்துக்குச் செல்லாமல் வகுப்பில் அமர்ந்து கொண்டிருந்தேன். காலைக் கூட்டம் முடிவடைந்தவுடன் சுரேஷ் எனும் மாணவன் என்னிடம் வந்து என்னைக் காரியாலயத்துக்கு அழைப்பதாகக் கூறினான். நான் காரியாலயத்துக்குச் சென்றேன். காரியலயத்துக்குச் செல்லும் போது முற்றத்தில் அதிபரும் ஆசிரியர்கள் சிலரும் இருப்பதைக் கண்டேன். என்னைக் கண்ட விஜேபால ஆசிரியர் "கூட்டத்துக்கு வராமல் எங்கே போனாய்?" எனக் கேட்டுக் கன்னத்தில் அறைந்தார். நான் வகுப்பில் இருந்ததாகக் கூறினேன். "நீ எப்பொழுது வகுப்பில் இருந்தாய்? நான் பார்த்திட்டுத் தானே வந்தேன். நீ தவறான ஆளுக்கு இந்தக் காரியத்தைச் செய்துள்ளாய். நான் உன்னிடம் விரட்டி விரட்டிப் பழிவாங்கு வேன்" எனக் கூறிய மஞ்சுல வடவல ஆசிரியை இரண்டு கைகளாலும் எனது கன்னத்தில் அறைந்து விட்டு, "காரியாலயத்துக்குப் போ" எனக் கூறினார். என்னால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. சுவரைப் பிடித்தவாறு கஷ்டப்பட்டு காரியாலயத்துக்குச் சென்றேன்.

நான் காரியாலயச் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தேன். தாங்க முடியாத அளவுக்கு தலைவலி எடுத்ததனால் மனையியல் வகுப்புக்குச் சென்று மனையியல் ஆசிரியையிடம் பெனடோல் தருமாறு கேட்டேன். "பென டோல் கையில் இல்லை கொஞ்சம் பொறு கென்டினுக்குப் போய் வாங்கிக் கொண்டு வருகிறேன்" எனக் கூறிய ஆசிரியை கென்டினுக்குச் சென்றார். நான் மனையியல் வகுப்பறையில் இருப்பதை மஞ்சுல வடவல ஆசிரியை கண்டார். அவர் நானிருக்கும் இடத்துக்கு வந்து கையைப் பிடித்து என்னைக் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றார். எனக்குப் பெனடோல் கிடைக்கவில்லை. பாடசாலை முடியும் வரை காரியாலயத் தில் நின்று கொண்டிருந்தேன். இவ்வாறு நின்று கொண்டிருக்கும் போது

என்னை அழைத்த அதிபர் என்னிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

பாடசாலை முடிவடைந்ததும் அதிபர் வகுப்புக்குச் சென்று புத்தகப் பையை எடுத்துக் கொண்டு மீண்டும் காரியாலயத்துக்கு வருமாறு கூறினார். அதற்கிணங்க வகுப்புக்குச் சென்று நான் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு டெப்பில் தண்ணீரும் குடித்துவிட்டு மீண்டும் காரியாலயத்துக்கு வந்தேன். காரியாலயத்துக்குச் சென்ற போது அதிபர் அவர்கள் வீட்டுக்குப் போய் அம்மா அல்லது அப்பாவுடன் பாடசாலைக்கு வருமாறு கூறினார். நான் காரியாலயத்தை விட்டு வெளியேறும் போது மஞ்சுலா, பிரியாவதி, கருணா எனும் ஆசிரியைகளும் தயானந்த ஆசிரியரும் என்னிடம் வந்து "பக்கக் கண்ணாடியை உண்மையிலேயே நீ எடுத்தாயா? உண்மையைச் சொல்" என என்னிடம் வினவினார்.

பின்னர் நான் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் பொழுது கனித் சந்திமால் என்ற மாணவன் சைக்கிளில் வந்து மிஸ் பாடசாலைக்கு வருமாறு கூறியதாக அறிவித்தான். நான் பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலைக்குச் செல்லும் போது பிரதி அதிபரான ஜயசிரியும் முன்னர் பெயர் குறிப்பிட்ட ஆசிரிய ஆசிரியைகளும் முற்றத்தில் இருப்பதைக் கண்டேன்.

பிரியாவதி ஆசிரியை என்னிடம் வந்து "எடுத்தாயா? இல்லையா?" எனக் கேட்டார். நான் இல்லையெனக் கூறும் போது ஜயசிரி ஆசிரியர் எனது தலைக்கு அடித்தார். நான் வீசி எறியப்பட்டேன். பின்னர் காரியாலயத்துக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார். நான் காரியாலயத்துக்குச் சென்றதும் மாலை 3 மணிவரை அங்கு என்னை நிற்க வைத்தனர். பின்பு அதிபர் கீர்த்தி சேனா வந்து வீட்டுக்குச் செல்லுமாறு கூறினார். காலையில் மஞ்சுலா, விஜேபால போன்ற ஆசிரிய ஆசிரியைகளும் மாலையில் ஜயசிரி ஆசிரியரும் எனக்கு அடிப்பதை அதிபர் பார்த்துக் கொண்டிருந்தார். அக்கால கட்டத்தில் எனக்கு எந்தவிதமான உணவும் வழங்கப்படவில்லை. நான் வீட்டுக்குச் செல்லும் பொழுது மாலை 3.20 மணியாக இருந்தது.

வீட்டுக்குச் சென்றவுடன் அடிவாங்கியது பற்றி நான் பெற்றோர்களிடம் எதுவும் கூறவில்லை. எனக்குக் கடுமையாகத் தலைவலி எடுத்ததோடு தலை சுற்றுவது போலும் இருந்தது. மாலை 6.00 மணியளவில் புலத் சிங்ஹல ஆஸ்பத்திரியில் கடமை புரியும் டாக்டர் பிரியந்த பெரேராவின்

டிஸ்பென்சரிக்குச் சென்று ஆசிரியர்கள் அடித்த சம்பவத்தைக் கூறி மருந்து வாங்கினேன். கட்டணமாக நூறு ரூபா அறவிட்டார். வருத்தம் அதிகமாகவிருந்தால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறும் கூறினார். இரவு 12.00 மணியாகும் பொழுது எனக்குக் கடுமையான வருத்தம் எடுக்கத் தொடங்கியது. நான் புலத்சிங்ஹல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். ஆஸ்பத்திரியில் வைத்து தலைவலி எடுத்து, இரண்டு தடவைகள் வாந்தியும் எடுத்தேன். காது வலி தொடர்ந்து இருந்து வந்தது.

2004.07.21ம் திகதி என்னை மாவட்ட வைத்திய அதிகாரியின் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற போது என்னிடம் விபரங்களை வினவினார். நான் நடந்த சம்பவங்களைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கும் போது இடை நிறுத்தி வாட்டுக்குச் செல்லுமாறு கூறினார். நான்கு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றேன். 2004.07.24ம் திகதி ஹொரண ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். 24.07.26ம் திகதி ஹொரண ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தேன். புலத்சிங்ஹல ஆஸ்பத்திரியில் வைத்துச் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் வந்து எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டனர். தற்பொழுதும் கூட எனக்கு ஓரளவு தலைவலி இருந்து கொண்டிருப்பதோடு, வாந்தி எடுக்க வேண்டும் போலும் தோன்றுகிறது. இருந்தாலும் வாந்தி வருவதில்லை. தூக்கமும் இல்லை. சாப்பாட்டில் வெறுப்பும் உண்டு.

2004.07.26ம் திகதி காலை 8.00 மணியளவில் மாணவர்கள் வீதிக்கிறங்கி "கள்ளன்" என்ற முத்திரை குத்தி என்னைக் கைது செய்யுமாறு கோரி எனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதாக எனக்கு அறியக் கிடைத்தது. இந்த நிலையில் பாடசாலைக்குச் செல்ல எனக்குப் பயமாக இருந்தது. தாக்குதல் காரணமாக தவணைப் பரீட்சைக்கு முன் நிற்கவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனது தாய் தயங்காமல் எல்லா வகுப்புக் கூட்டங்களுக்கும் சமூகமளிக்கிறார். அச்சந்தர்ப்பங்க ளில் ஆசிரியர்கள் எவரும் என்னைப் பற்றி எனது தாயிடம் எந்தவிதமான குற்றங்களையும் இதுவரை கூறியதில்லை.

இச் சித்திரவதைக்கு எதிராக புலத்சிங்ஹல பொலீஸார் மேற்கூறிய ஆசிரியர், ஆசிரியை இருவருக்கும் எதிராக மதுகம நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். அது தண்டனைச் சட்டம் 314ம் இலக்கத்தின் கீழ்த் தாக்கல் செய்யப்பட்டது.

அதன் பின்னர் பொலீஸார் மேலும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய சில பகுதிகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவித் தனர். வழக்குத் தொடர்ந்து ஒரு வருடம் கழியும்போது வழக்கை அகற்றிக் கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் செய்த முறைப்பாட்டுக்குக் கிடைத்த பதில் பின்வருமாறு:

பாடசாலையினுள் மாணவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சரீர ரீதியான துன்புறுத்தல்களை ஒழித்துக்கட்டும் நோக்கில் கல்வித் திணைக்களம் விசேட ஒரு பிரிவை ஆரம்பித்துள்ளது. அப்பிரிவில்:

01. பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரமனி பெரேரா

02. பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ. எம். சலனுதீன்

03. பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்யாணி பெரேரா என்பவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

உங்களது பிரச்சினையை இப்பிரிவின் எந்தவொரு அங்கத்தவருக்கும் அறிவிக்க முடியும். முகவரி, கல்வி அமைச்சு, இசுருபாய- பத்தரமுல்ல- கையொப்ப மிட்டார், சட்ட உத்தியோகஸ்தர். இந்த ஆலோசனைகள் கிடைக்க முன்னரும், கிடைத்த பின்பும் கல்வி அமைச்சின் பொறுப்பு வாய்ந்த அதி காரிகளுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகள், ஞாபகப்படுத்தல்கள் ஏராளமாகும்.

ஒரு தடவை கல்வி அமைச்சின் அதிகாரிகள் வந்து வாக்கு மூலத்தை பதிவு செய்து கொண்டனர். இதை எழுதும் சந்தர்ப்பத்தில் இந்த விசாரணைக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் அறிவதற்கில்லை.

மனித உரிமை ஆணைக்குழு முறைப்பாடு சம்பந்தமாக ஒரு ஆய்வை மேற் கொண்டு அது சம்பந்தமான சிபார்சை 2007.07.08ம் திகதி வெளியிட்டது.

அதன் பிரகாரம் மஞ்சுலா வடவல, ரணவக ஆராச்சிகே தொன் விஜேபால என்பவர்கள் ஆயிரத்தி ஐநூறு ரூபா வீதமும், மத்துமலாகே

தொன் ஜயசிரி ஆயிரம் ரூபா பெறவும் அவனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டது. மேலும் சட்ட நடவடிக்கைகளுக்காக சிபார்சின் ஒரு பிரதி சட்டமா அதிபருக்கும், மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த ஆசிரியையும் இரண்டு ஆசிரியர்களும் மனித உரிமை ஆணைக்குழு செய்துள்ள சிபார்சை மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு கோரி மேல் முறையீடொன்றை முன் வைத்தனர். அதனை ஆராய்ந்து பார்த்த ஆணைக்குழு சிபார்சில் மாற்றங்களைச் செய்யுமளவுக்குப் போதுமான அளவு காரணங்கள் இல்லையெனக் கூறி அதனை நிராகரித்தது. மேலும் இச்சிபார்சு கட்டாயமாக செயற்படுத்தப்பட வேண்மென்றும் வலியுறுத்தியது. மேன் முறையீட்டை ஆராய்ந்து பார்த்தன் பின் வெளியிடப்பட்ட ஆய்வுக் குறிப்பல் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரதிவாதிகள் அவர்களது மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் வெளிக் காயங்கள் இல்லாவிட்டாலும் தலைவலி மற்றும் மயக்கம் இருந்ததாக புலத்சிங்ஹல வைத்திய அதிகாரி குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பான சம்பவங்களையும் சாட்சிகளையும், கவனத்தில் கொள்ளும் போது பிரதிவாதிகளால் தாக்கப்பட்டது உண்மையானதே என மனித உரிமை ஆணைக்குழு விசாரணை உத்தியோகஸ்தர்களும் விமர்சன அதிகாரியும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் மாணவர்கள் சாட்சி வழங்காமை பற்றிப் பிரதிவாதிகளால் முன் வைக்கப்படும் வாதங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாகும்.

காரணம் பாடசாலையினுள் ஆசிரியர்களுக்கு (விஷேடமாக ஒழுக்காற்றுக் குழுவுக்கு) எதிராக சாட்சி கூற முடியாத ஒரு நிலை இருந்து வந்தது. சிபார்சை மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு பிரதிவாதிகளால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்து பார்க்கும் போது தெரிய வருவது, அவை சிபார்சை மீண்டும் ஆராய்ந்து பார்க்கும் அளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய, சட்டரீதியான விளக்கம் கூறல் அல்ல என்பதாகும்.

அதன்படி 2006.07.06ம் திகதி வெளியிடப்பட்ட சிபார்சை எந்தவிதமான திருத்தங்களுமின்றி செயற்படுத்தல் ஏற்றதாகுமெனக் குறிப்பிடுகிறேன்.

குறிப்பு:

இச்சம்பவம் ஆசிரியர்களின் மிலேச்சத்தனமான சுபாவத்தைக் காட்டி நிற்பதாகும். நாட்டின் சட்டம் மற்றும் ஆசிரியர்களுக்கான ஒழுக்கநெறிகள் என்பவற்றை தூக்கி எறிந்துவிட்டு சண்டியர்களாகச் செயற்படல் தாம் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களென காட்டி நிற்க முயல்வதாகும்.

இச்சம்பவம் தொடர்பாக கல்வித் துறை அதிகாரிகள் தாயின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டாலும், எல்லாவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக தெரிவதற் கில்லை.

இது சட்டமா அதிபரின் நடவடிக்கைகள் மற்றும் அதில் உள்ள மோசடி யான விஸ்வரூபத்தை வெளிப்படுத்திய மற்றுமொரு சந்தர்ப்பமாகும்.

இந்த ஆசிரியையும், ஆசிரியர்களும் மனித உரிமை ஆணைக்குழு வின் சிபார்சை இன்றுவரை செயற்படுத்தவில்லை.

# 7. ஸ்ரீ சுமதி மஹா வித்தியாலயம்-பத்தரமுல்ல

1994.05.03ம் திகதி அவன் பாடசாலையில் வைத்து மூன்று ஆசிரியர்களால் தாக்கப்பட்டான். அப்பொழுது அவனது வயது பதினேழு. இத்தாக்குதல் அன்றைய பிரதி அதிபராக எஸ். விக்ரமசிங்ஹா, உப அதிபரான மாணிக்ககே உபதிஸ்ஸ மகீபால சில்வா, மற்றும் டப்ளியூ. ஏ. எல். விஜேசூரிய எனும் ஆசிரியர்களால் மேற் கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல் காரணமாக அவன் பெரும் மானீஸ் பிரச்சினைகளுக்கும் உட்பட்டான். அதனால் பெற்றோர்ருக்கு அவனை ஒரு மனநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டி நேர்ந்தது. மனநோய் ஆஸ்பத்திரியில் ஒரு மாதகாலம் தங்கி சிகிச்சை பெற்றான்.

மாணவனின் தந்தை தனது மகனைத் தாக்கிய அந்த மூன்று ஆசிரியர்களுக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணையின் போது பிரதிவாதிகளான ஆசிரியர்கள் தாக்குதல் சம்பவத்தை நிராகரித்தனர். எனினும் மகீபால சில்வா அவனது கன்னத்தில் அறைந்ததாக ஏற்றுக் கொண்டார். மாணவனின் தந்தை பொய்க் குற்றசாட்டுக்களை அடிப்படையாக வைத்து இந்த மனுவை நீதிமன்றத்தின் முன் வைத்துள்ளார் என்றும், அவன் கட்டுக்கடங்காத

ஒரு மாணவன் என்றும் ஆசிரியர்கள் நீதிமன்றத்துக்குக் கூறினர்.

ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட எல்லாக் காரணங்களையும் உயர் நீதிமன்றம் நிராகரித்தது. மாணவனின் வாக்குமூலத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. மாணவனுக்கு எதிராக ஒரு விரலையேனும் உயர்த்தும் அதிகாரம் ஆசிரியர்களுக்கு இல்லாத காரணத்தால் இந்த ஆசிரியர்களால் மாணவன் தாக்கப்படல் பரிபாலன அல்லது அதிகாரம் சம்பந்தமாக ஒரு நடவடிக்கையல்ல என மூன்று ஆசிரியர்கள் சார்பாக முன் நின்ற சட்டத்தரணி முன் வைத்த வாதத்தை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நிராகரித்தனர்.

மாணவனுக்கு அவர்கள் ஐம்பதினாயிரம் ரூபா பணத்தையும், பிரதி அதிபரான விக்ரம சில்வா, உப அதிபரான பில்லா என்பவர்கள் நாலாயிரம் ரூபா நஷ்டஈட்டையும் விஜேசூரிய என்பவர் இரண்டாயிரம் ரூபா நஷ்டஈட்டையும், மொத்தம் 60.0000 ரூபா நஷ்டஈட்டை நீதிமன்றம் அவனுக்கு வழங்கியது.

இந்த நஷ்டஈட்டு அவனது கௌரவத்தை அடையாளப்படுத்தும் நோக்கில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கொடுப்பனவாகும்.

## 8. போம்புவல மஹா வித்தியாலயம் (நவோதயா) - களுத்துறை

பதினோராம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்த அவள் ஒரு பதினாறு வயதுடைய மாணவி. 2007.03.03ம் திகதி அவள் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்க உட்படுத்தப்பட்டாள். தொடர்ந்து சில நாட்கள் அடைத்து வைக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்குப் பயன்படுத்தப்பட்டாள். துஷ்பிரயோகம் செய்தவன் ஒரு சமாதான நீதிபதி. அவனுடன் சில அமைச்சர்கள் கிட்டிய தொடர்பு வைத்திருப்பதாகவும் அறியக் கிடைத்தது. அவனது பெயர் ஏ. டப்ளியூ. ருவன். வயது 32. உக்கல, உடுவர நாத்துபான எனும் கிராமத்தில் வசித்து வந்தான்.

பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் குற்றவாளி கைது செய்யப்பட்டு பொலீஸாரால் சட்டத்தின் முன் கொண்டு செல்ல முடிந்தது.

மூன்று மாதங்கள் கழித்து 2006.06.07ம் திகதி அந்த மாணவி ஒரு கடிதத்தின் மூலம் களுத்துறைக் கல்விப் பணிப்பாளரிடமும், போம்புவல மஹா வித்தியாலய அதிபரிடமும் தனது கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேறொரு பாடசாலை பெற்றுத் தருமாறு வேண் டிக் கொண்டாள்.

பிரதேச மக்கள் இச்சம்பவத்தை அறிந்திருந்தமையினால் கிராமத்துப் பாடசாலையில் கல்விகற்றல் கஷ்டமான காரியமென்பதை அவள் உணர்ந்திருந்தாள்.

அவளது வேண்டுதலுக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. அப்பொழுது அவளுக்குப் பொறுப்பாளியாக இருந்த அவளது சிற்றன்னை களுத்துறை கல்விப் பணிப்பாளரிடமும், மனித உரிமை ஆணைக் குழுவிடமும், மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும் 2006.06.28ம் திகதி தனது உறவுமுறையான மகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு தடங்கல் ஏற்படுத்தாமல் வேறொரு பாடசாலையைப் பெற்றுக் கொடுக்குமாறு ஒரு கடிதத்தின் மூலம் வேண்டிக் கொண்டார்.

இதற்கிடையில், போம்புவல மகா வித்தியாலய அதிபர் திரு ஆரியதாஸ சில்வா அவளது விடுகைப் பத்திரத்தை, அவளை வல்லுறவுக்குட்படுத்திய நபரிடம் கொடுத்திருப்பதாக அறிய முடிந்ததென அவள் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

அதன் பின்னர், தனது உறவுக்காரப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையைத் தொடர்வதற்குப் பொருத்தமான பாடசாலையொன்று பெற்றுத் தருமாறும், போம்புவல மஹா வித்தியாலய அதிபரின் சட்ட விரோத நடவடிக்கைகளையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொறுப்பு வாய்ந்த சகலரிடமும் வேண்டிக் கொண்டாள்.

இதற்கிடையில் 2007.12.06ம் திகதி குறிப்பிட்ட (இலக்கம் தெளிவில்லை) ஒரு கடிதம் அவளுக்குக் கிடைத்தது.

*****

உமது இலக்கம்

எனது இலக்கம் /மே மா/களு/ வலய/ பாப3 (தெளிவில்லை).

வலயக் கல்விக் காரியாலயம்

களுத்துறை

2007.12.06.

சித்தியின் பெயரும் முகவரியும்

.............................................

.............................................

.............................................

விடயம்- கல்வி கற்பதற்கான உரிமையை உறுதி செய்யுமாறு கோரல்.

மேற் கூறிய விடயம் தொடர்பாக எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தோடு தொடர்புபட்டது.

திருமணமான அல்லது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் பட்ட அல்லது கர்ப்பம் தரித்த ஒரு பெண் பிள்ளைக்கு பாடசாலையில் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்க முடியாது. க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு முன் நிற்க வேண்டுமாயின் தனிப்பட்ட முறையில் பரீட்சை எழுதுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. அதன்படி செயற்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

பீ.பீ.டி. சில்வா<br>
பிரதி கல்விப் பணிப்பாளர்.<br>
(கல்வி அபிவிருத்தி )<br>
வலயக் கல்விக் காரியாலயம்.<br>
களுத்துறை.

கை/ஏ. என். டப்ளியூ. பெரேரா<br>
வலயக் கல்விப் பணிப்பாளர்<br>
களுத்துறை.

பிரதி: அதிபர்,<br>
போம்புவல மஹா வித்தியாலயம்.

இவ்வாறாக அந்தப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் (கல்வி நிர்வாகம்) வலயக் கல்விப் பணிப்பாளரும், போம்புவல ம ஹா வி த் தி யா ல ய அதிபரும் இரண்டாம் தடவையாகவும் அந்த யுவதியின் கல்வி வாய்ப்பை மறுதலித்தனர். அவளுக்குத் தனது கல்விக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள உயர் நீதிமன்றம் வரை செல்ல வேண்டி வந்தது. அவள் சார்பாக அவளது மாமனார் 2008 ஜனவரி 10ம் திகதி அடிப்படை உரிமை சம்பந்த மான ஒரு மனுவை உயர் நீதிமன்றத்தின் முன் கொண்டு சென்றார். மனுவை ஆராய்ந்து பார்த்த உயர் நீதிமன்றம் அந்த மாணவிக்கு ஏற்ற ஒரு பாடசாலையைப் பெற்றுக் கொடுக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியது. சட்டமா அதிபர் அவளது கல்விக்கான உரிமையை உறுதி செய்யுமாறு களுத்துறை கல்விப் பணிப்பாள ருக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவுக்கமையப் பெற்றுக் கொடுக்கப்பட்ட பாடசாலைக்கு அந்த மாணவி, தடையான தனது கல்வியை மீண்டும் ஆரம்பமாக்கும் நோக்கில் சென்றாள். வலயக் கல்விப் பணிப்பாளரின் கடிதத்தோடு பாடசாலைக்குச் சென்ற போது அதிபர் விடுகைப் பத்திரம் கொண்டு வருமாறு வேண்டிக் கொண்டார். விடுகைப் பத்திரம் போம்புவல (நவோ தயா) வித்தியாலய அதிபரால் தன்னைத் துஷ்பிரயோகத்திற்கு உட்

படுத்தப்பட்ட நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறினாலும் புதிய பாட சாலை அதிபர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

மீண்டும் மாமனார் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சென்றார். அவர் காரியாலயத்தில் இருக்கவில்லை. பின்பு அவரின் கீழ் கடமை புரியும் உத்தி யோகஸ்தர்களைச் சந்தித்தார். அவர்கள் அக்காரியத்தையும் சட்டத்தின் முன் செய்து கொள்ளுமாறு கூறினார். பின்பு அது சம்பந்தமாக சட்டமா அதிபரைச் சந்திக்க வேண்டி வந்தது. சட்டமா அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளரை அழைத்தார். அச்சந்தர்ப்பத்தில் போம்புவல மஹா வித்தி யாலய அதிபரால் துஷ்பிரயோகம் செய்த நபரிடம் கொடுக்கப்பட்டிருந்த விடுகைப் பத்திரம் புதிய பாடசாயைில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

வலயக் கல்விப் பணிப்பாளர் அவளைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு பணித்தார். புதிய அதிபர் மாணவியைப் பாடசாலையில் சேர்த்துக் கொண்டார். அது 2008.06.10 ம் திகதியாகும். அவள் தனது கல்வி நடவடிக்கையை 2008ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையை இலக்காகக் கொண்டு முன்னெடுத்துச் சென்றாள்.

குறிப்பு:

32 வயதான அந்த சமாதான நீதவான் அந்த மாணவியைப் பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்படுத்தினான். அதற்கு அதிகாரமுள்ளவர்கள் பலரின் ஒத்துழைப்பு அவனுக்குக் கிடைத்திருந் தது. நீதியை வென்றெடுத்தது பல போராட்டத்தின் பின்பே. அதற்கும் மூன்ற மாதங்கள் சென்றன. தனது கல்வி நடவடிக்கையை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல எட்டு மாதங்கள் சென்றன. அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ள உயர் நீதிமன்றம் வரை சென்றாள். இத் தடவை அவள் போராடியது படித்தவர்களெனத் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும், மாணவர்களுக்குக் காலையும் மாலையும் அறிவுரை கூறும், ஒழுக்க நெறிகளைக் கற்றுக் கொடுக்கும் ஒரு சிலருடனேயே.

துஷ்பிரயோகத்திற்கு எதிரான குற்ற வழக்கு இன்னும் முடிவடைய வில்லை. சட்ட விரோதமாக துஷ்பிரயோகம் செய்த நபருக்கு மறைமுக மாக உதவி செய்து ஒரு அப்பாவிச் சிறுமியின் வாழ்க்கையை முழுமை யாகவே அழித்தொழிப்பதற்காகச் செயற்பட்ட களுத்துறை வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், (கல்வி நிர்வாகம்) உட்பட போம்புவல அதிபர் போன்றவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

## 9. மதீனா தேசிய பாடசாலை- சியம்பலாகஸ்கொடுவ

2009.08.13ம் திகதி அதிபர் முசம்லா அவனைக் காரியாலயத்துக்கு அழைத்து, வேறொரு மாணவனை அழைத்து வருமாறு உத்தரவிட்டார். அதற்காக அவன் சென்று கொண்டிருக்கும் போது காரியாலய உதவிச் சேவகரான நிஜாம் அவனிடம் வந்து மஹ்ரூப் ஆசிரியரைச் சந்திக்குமாறு கூறியுள்ளான்.

அவன் மஹ்ரூப் ஆசிரியரைச் சந்தித்தபோது (பிரதி அதிபர்) அவனது பெயர் என்ன என வினவ, அவனது வலது காதைத் திருகித் தலையின் பின்புறமாகப் பலதடவைகள் அடித்து முட்டுக்காலில் வைத்துள்ளார். முட்டுக்காலில் நின்று கொண்டிருக்கும் போது அவனது கன்னங்களில் அறைந்து, காதுகளைத் திருகிச் சித்திரவதை செய்துள்ளார்.

"நான் பொலீஸில் வேலை செய்தவன். அது எல்லோருக்கும் தெரிந்த விடயம்" என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு தொடர்ந்து மூன்று பாடங்கள் முடியும் வரை முட்டுக்காலில் நிற்க வைத்துப் பல தடவைகள் தாக்கியுள்ளார்.

இடையிடையே இத்தாக்குதலைத் தடுத்து நிறுத்த அதிபர் முயற்சித்தாலும் அது வெற்றியளிக்கவில்லை. இடையில் அசித் என்ற ஆசிரியரும் வந்து அவனைத் தாக்கியுள்ளார்.

பின்பு அவனைக் காரியாலயத்துக்கு அழைத்த அதிபர் வகுப்பு

மாணவி ஒருவரைத் தாக்கியதாக ஒரு கடிதத்தில் பலாத்காரமாகக் கையொப்பம் வாங்கியுள்ளார். அக்கடிதத்தில் வகுப்பு ஆசிரியையினதும் கையொப்பம் வாங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் கடும் சுகயீனத்துக்குள்ளான அந்த மாணவன் வீட்டுக்குச் செல்ல அதிபரிடம் அனுமதி கோரினான். அனுமதி வழங்கப்படவில்லை. அதிபர் முசம்லா அவசர சிகிச்சை அறைக்கு அவனை அழைத்துச் சென்றார். அங்கு பதீஜா எனும் ஆசிரியை அவனது காயங்களுக்கு மருந்து போட்டு ஒரு வகைப் பாமையும் தேய்த்துள்ளார்.

மீண்டும் அவன் அதிபரிடம் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரினாலும் அனுமதி வழங்கப்படவில்லை.

அவன் வீட்டுக்குச் சென்றபோது சம்பவத்தையறிந்த தந்தை அது பற்றி வினவ அதிபரைச் சந்தித்தபோது அதிபர், சம்பவத்தை அவ்வளவு தூரம் கொண்டு செல்ல வேண்டாமென்றும், தனிப்பட்ட முறையில் டாக்டர் ஒருவரைச் சந்தித்து தடுக்கிவிழுந்ததாகக் கூறி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதிபரின் ஆலோசனையை நிராகரித்த தந்தை அவனை நாரம்மல பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாட்டை எழுதிவிட்டு நாரம்மல மருத்துவமனையில் அனுமதித்தார்.

மறுநாள் நாரம்மல ஆஸ்பத்திரியிலிருந்து குருநாகல் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டான். அங்கு 4 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றான்.

சுகமானதன் பின் அந்த மாதம் 27ம் திகதி அவன் வழக்கம் போல் பாடசாலைக்குச் சென்றபோது வலயக் கல்விக் காரியாலயத்திலிருந்து இரண்டு அதிகாரிகள் வந்து சமாதானமாகுமாறு கூறி, ஆறு பக்கக் கடிதத்தில் அவனது கையொப்பத்தை வாங்கியுள்ளனர்.

அவனுக்குச் சிங்களம் தெரியாது. அவன் ஆங்கில மூலம் கல்வி கற்கும் மாணவன். கல்விக் காரியாலய அதிகாரிகள் சிங்கள மொழி மட்டும் அறிந்தவர்களாக இருந்தனர். அதனால் அக்கடிதத்தை சிங்களத்தில் எழுதி கையொப்பம் வாங்கப்பட்டிருந்தது.

நாரம்மல பொலீஸார் இது தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இது சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு இச்சம்பவம் தொடர்பாக மேற் கொண்ட விசாரணையின் பின்னர் ஐயாயிரம் ரூபா நஷ்டஈட்டைச் செலுத்துமாறு மஹ்ரூபுக்கு உத்தரவிட்டது. தற்பொழுது இந்த நஷ்டஈடு மாணவனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

இது சட்டத்தைக் கையிலெடுத்து சண்டியர்கள் போல் செயற்படும் ஆசிரியர்கள் பற்றிய நல்லதொரு உதாரணமாகும்.

அத்துடன் குற்றவாளிகளுக்கு உதவி செய்யும் கல்வித்துறை உயர் அதிகாரிகள் பற்றியும் சட்டமா அதிபர் இது போன்ற சம்பவங்கள் மீது கொள்ளும் கவனம் பற்றியும் இதன் மூலம் எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

# 10. சென் லூக் மஹா வித்தியாலயம்- இரத்தினபுரி

2008.05.06 ம் திகதி ஐந்தாம் பாடத்துக்கான ஆசிரியர் வகுப்புக்குச் சமூகமளிப்பதில்லையென அறிவிக்கப்பட்ட பின்னர் அவன் கழிவறைக்குச் சென்றான்.

இடையே வகுப்புக்கு வந்த சரத் விஜேசிங்ஹ எனும் விஞ்ஞான ஆசிரியர் அவனை அழைத்து வருமாறு இன்னும் இரண்டு மாணவர்களை கழிவறைக்கு அனுப்பி வைத்தார்.

வகுப்புக்கு வந்தவுடன் சரத் விஜேசிங்ஹ ஆசிரியர் கையில் இருந்த தடியால் அவனை அடித்துள்ளார். அத் தாக்குதல் காரணமாக அவனது வலது கை காயமடைந்தது.

வீட்டுக்குச் சென்றதும் பெற்றோர்கள் அவனை இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர்.

மறுநாள் (2008.05.07ம் திகதி) ஆஸ்பத்திரிப் பொலீஸார் வந்து அவனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டனர். 2007.05.08 ம் திகதி ஆஸ்பத்திரிச் சேவகர்கள் மேற் கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக அவர்களது ஆலோசனையின் படி அவனை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டி வந்தது.

இது தொடர்பாக பொலீஸார் ஆசிரியருக்கு எதிராக இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் 707/08 இலக்கத்தின் கீழ் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின் பின்னர் சரத் விஜேசிங்ஹ அந்த மாணவனுக்கு பத்தாயிரம் ரூபா நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டுமென சிபார்சு செய்தது.

குறிப்பு:

மனித உரிமை ஆணைக்குழு மேற் கொண்ட விசாரணையின் போது ஒரு பிரம்பைக் கொண்டு அவனது பின் புறத்துக்கு அடித்ததாகவும், தவறுதலாக அந்தப் பிரம்பு அவனது கையில் பட்டதாகவும் சரத் விஜேசிங்ஹ ஆசிரியர் கூறியுள்ளார்.

அதிபர், அது சம்பந்தமாகத் தனக்கு எவ்வித முறைப்பாடும் செய்யவில்லையென்றும், இருந்தாலும் தான் அச்சம்பவம் தொடர்பாக தான் திருப்தி கொள்ளவில்லையென்றும் குறிப்பிட்டார்.

# 11. ஸ்ரீ சுமன மஹா வித்தியாலயம்- (பிரிவெனா) இரத்தினபுரி

அவன் இரத்தினபுரி சுமன மகா பிரிவெனாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான்.

2007.06.26ம் திகதி அங்கு கடமை புரியும் ஸ்டான்லி பெர்னாண்டோ என்ற ஆசிரியர் எவ்வித காரணமுமின்றி மிருகத்தமான முறையில் அவனைத் தாக்கியுள்ளார். அதற்கான காரணத்தைக் கேட்டபோது "உனது வேலையைப் பார். போய் உனது மனைவியைக் கூட்டிக் கொண்டு வா" எனக் கூறியுள்ளார்.

வீட்டுக்குச் சென்றதும் அவன் வாந்தி எடுத்துள்ளான். தந்தை அவனை இரத்தினபுரி பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்துவிட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். அன்று இரவு எக்ஸ்ரே படமெடுப்பதற்காக அழைத்துச் செல்லும் போது பிரிவெனாவில் ஆசிரியர்களாகக் கடமை புரியும் கிங்ஸ்லி ரன்திலக, உடுல் எனும் ஆசிரியர்களுடன் கிங்ஸ்லி பெர்ணான்டோவும் ஆஸ்பத்திரியில் இருப்பதை அவன் கண்டான். அவர்களுள் ஒருவர் சம்பவம் பற்றி அவனிடம் விசாரித்துள்ளதோடு மறுநாள் அவனது டிக்கட் வெட்டப்படும் என்பதையும் அவர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்பதை அந்த நபரின் மூலம் அவன் உணர்ந்து கொண்டான்.

2007.07.09ம் திகதி இரத்தினபுரி பொலீஸ் நிலையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஸ்டான்லி பெர்ணான்டோவோடு அதிபரான ஹேனபொல சுமன ஜோதி தேரரும் வந்திருந்தார்.

பொலீஸ் நிலைய விசாரணையின் போது அதிபரான சுமன ஜோதி

தேரரும், ஸ்டான்லி பெர்ணான்டோவும் எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தாமல் கல்வி கற்க அவனுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதாக வாக்குறுதி வழங்கினர். அதன்படி அவன் 2007. 07.10ம் திகதி பிரிவெனா வுக்குச் சென்றான். அவனைக் காரியாலயத்துக்கு அழைத்த அதிபர் முன்னர் படித்த பாடசாலையின் விடுகைப் பத்திரம் தனது கடிதக் கோவை யில் இல்லையென்றும், அதனால் உயர்தரக் கல்விக்கான தகுதி அவனு க்கு இல்லையென்றும் கூறி பிரிவெனாவிலிருந்தும் நீக்குவதாக மாணவர் முன்னேற்ற அறிக்கைப் பத்திரத்தில் எழுதி அவனிடம் ஒப்படைத்துள்ளார்.

பிரிவெனா ஆசிரியரான ஸ்டான்லி பெர்ணான்டோவின் தாக்குதல் பற்றியும், அதிபரான ஹேனபொல சுமன ஜோதி தேரரின் வஞ்சகமான நடவடிக்கை பற்றியும் அவன் மனித உரிமை ஆணைக்குழு, கல்வி அமைச்சின் பிரிவெனாப் பிரிவு பணிப்பாளருக்கும் முறைப்பாடு செய்தான். இந்த முறைப்பாட்டுக்குப் பின்னர் காணாமல் போன விடுகைப் பத்திரத்தை அதிபரான ஹேனபொல சுமன ஜோதி தேரரால் தபாலில் அவனுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மனித உரிமை ஆணைக்குழு இச்சம்பவத்தில் மனித உரிமை மீறல் சம்பந்தமாக எதுவும் தென்படுவதற்கல்ல எனக் கூறியது. அதற்கு அவனது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பிரிவெனாப் பிரிவு பணிப்பாளர் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக இரண்டு அதிகாரிகளை அனுப்பி வைத்திருந்தார். அவர்கள் அவனிடம் உடன்பட்டு வருமாறு கூறி வாக்கு மூலத்தைப் பதிவு செய்ய முயற்சி செய்துள்ளனர்.

பொலீஸார் ஸ்டான்லி பெர்ணான்டோவுக்கு எதிராக இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தனர். இருந்தாலும் வழக்குக்கு முன் நிற்பதற்கான (சித்தாசி) அழைப்பு அவனுக்கு விடுக்கப்படவில்லை.

வாதி என்ற முறையில் அவன் வழக்கிற்கு முன் நிற்காத காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதிவாதியான ஸ்டான்லி பெர்ணான்டோவை விடுதலை செய்ய நீதிமன்றம் தீர்மானித்தது.

அது பற்றி அறியக் கிடைத்ததும், ஒரு சட்டத்தரணி மூலமாக அவன் தனக்கு வழக்குக்கான அழைப்பு (சித்தாசி) கிடைக்கவில்லையென 2008.11.14 திகதி நீதிமன்றத்துக்கு அறிவித்தான்.

இந்த வேண்டுகோளுக்கிணங்க ஸ்டான்லி பெர்ணான்டோவுக்கு எதி ரான வழக்கை மீண்டும் விசாரணை செய்ய நீதிமன்றம் முடிவு செய்தது.

தற்பொழுது வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது.

# 12. கோனகஸ்தென்ன வித்தியாலயம்- பலாங்கொட

அவனது வயது பதினைந்து. அவன் பதினோராம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான்.

2007 01.07ம் திகதி வழக்கம் போல் அவன் பாடசாலைக்குச் சென்றான். இடதுகாலில் ஏற்பட்டிருந்த ஒரு காயம் காரணமாக அன்று அவன் செருப்பு அணிந்து கொண்டு பாடசாலைக்குச் சென்றான்.

அன்றும் வழக்கம் போல் காலை சமய அனுஷ்டானங்கள் நடை பெற்றன. ஏனைய மாணவர்களுடன், இருந்தாலும் காலில் உள்ள காயம் காரணமாக சாரீர அப்பியாச நடவடிக்கையில் ஈடுபட முடியாது என வீரரத்ன ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவன் வகுப்ப றைக்குச் சென்றான்.

இடையிலே சந்தித்த அதிபர் பிரேமசிரி டயஸ் அவர்கள் எங்கு செல்கிறாய் என அவனிடம் வினவினார். அவன் விபரத்தைக் கூறினான். இருந்தாலும் அதனை அவர் ஏற்றுக் கொள்ளாமல் அவனை அடிக்கத் தொடங்கினார். சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் சிலர் அவனை அடிக்க வேண்டாம் என்று வேண்டிக் கொண்டாலும் அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

காதில் இருந்து இரத்தம் சொட்ட அழுது கொண்டிருக்கும் அவனைக் கண்ட வகுப்பாசிரியையான தம்மிகா, அதிபர் பிரேமசிரி டயஸினால்

தாக்கப்பட்டவன் என்பதை அறிந்ததும் அந்த இடத்தை விட்டு மெதுவாக நழுவிச் சென்றாள்.

தனது நண்பனின் காதில் இருந்து இரத்தம் சொட்டுவதைக் கண்ட நண்பர்கள் வேதனையுடன் ஒரு ஆட்டோ வண்டியை வரவழைத்து அவனது சித்தப்பா வேலை செய்யும் வேலைத்தளத்துக்கு அழைத்துச் சென்றனர். அந்தளவுக்கு அவர்கள் கருணையுள்ளவர்களாகவும், தைரியம் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

சித்தப்பா முதலில் அவனை வெலிகேபொல பொலீஸ் நிலையத்துக்கும் அங்கிருந்து மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றார். வெலிகே பொல அரசாங்க வைத்தியசாலையில் இருந்து அவன் பலாங்கொடை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டான். மறுநாள் அங்கிருந்து இரத்தினபுரி பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டான். பொலீஸார் வந்து வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டனர். வலயக் கல்விக் காரியால யத்திலிருந்து வந்ததாகக் கூறியே இரண்டு அதிகாரிகள் அவனிடம் விசாரணை செய்தனர்.

பலாங்கொடை பொலீஸார் பிரேமசிரி டயஸ் என்ற நபரைக் கைது செய்து பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தின் முன் கொண்டு சென்ற தன் பின்னர் இருபத்தையாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டான்.

இதை எழுதும் 2009.05.01ம் திகதி வரை வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் கொழும்பில் செயற்படும் ஒரு மனித உரிமை அமைப்பு சட்டத்தரணி எம். கே. காலிங்க ரவீந்திர என்பவரின் மூலமாக அடிப்படை மனித உரிமை மீறல் சம்பந்தமான ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்தனர். இந்த வழக்கு சட்டத்தரணிகளின் அக்கறையின்மை காரணமாகத் தள்ளுபடி செய்யப்பட்டது.

குறிப்பு:

இச்சம்பவத்தின் போது காயமடைந்த ஒரு மாணவன் விடயத்தில் ஆசிரியர்கள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது பற்றிச் சிந்தியுங்கள். இது ஒடுக்குமுறைக்குள்ளான அப்பாவிகளை மனித உரிமை அமைப்புக்கள் ஏலம் விடுதல் சம்பந்தமான நல்லதொரு உதாரணமாகும்.

# 13. அலோஸியஸ் வித்தியாலயம்- இரத்தினபுரி

அலோஸியஸ் வித்தியாலயம் ஒரு தேசியப் பாடசாலையாகும். இச்சம்பவம் 2006.10.04ம் திகதி நடந்துள்ளது. அவன் நாலாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். அவனது வயது பத்து.

அன்று வகுப்பாசிரியையான டீ. எம். பிரியந்தி "உனது அம்மாவுக்கு இடி விழட்டும்" எனக் கூறி அவனை அடித்துள்ளார்.

இது சம்பந்தமாக தந்தை அதிபரிடம் கூறிய போது, அதிபர் அதனை பொலீஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுக்குச் சென்று முறைப்பாடு செய்யுமாறு கூறியுள்ளார்.

அதிபரின் ஆலோசனையின்படி தந்தை தனது மகனுடன் பொலீஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுக்குச் சென்று இது சம்பந்தமாக முறைப்பாடு செய்தார். அத்தோட கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள கல்விப் பணிப்பாளருக்கும் அறிவித்துள்ளார்.

பொலீஸாரும் கல்வி அமைச்சும் மாணவனின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டனர். மனித உரிமை ஆணைக்குழு இது சம்பந்தமான விசாரணையை ஆரம்பித்தது. பொலீஸார் ஆசிரியைக்கு எதிராக இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர்.

பொலீஸாரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என ஒரு பொய்க் குற்றச்சாட்டை முன் வைத்து மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணையை இடை நிறுத்தியது.

ஆசிரியைக்கு எதிராக எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கையும் இதுவரை மேற் கொள்ளப்படவில்லை. நீதிவான் நீதிமன்றம் வழக்கை ஆலோசனைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்தது. மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கைகளுக்கு எதிராக எழுதிய கடிதங்களுக்கு எந்தவிதமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

இச் சம்பவத்துக்குக் காரணம் அந்த மாணவன் பீ. எச். பிரியந்தி ஆசிரியை நடாத்தும் புலமைப் பரீசில் வகுப்புக்குச் செல்லாமல் பாடசாலை யின் இன்னொரு ஆசிரியை நடாத்தும் புலமைப் பரீசில் வகுப்புக்குச் சென்றமையேயாகும். இந்த ஆசிரியை மிகக் கீழ்தரமான சொற்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பேசுவதை இன்னும் அதிபர் பொறுத்திருப்பது தேசிய பாடசாலைக்குப் பொருத்தமான கல்விப் பணிப்பாளரின் ஆசீர்வாதம் காரணமாகவா?

குறிப்பு:

ஆசிரியர்கள் செய்யும் குற்றச் செயல்கள் சம்பந்தமாக பொறுப்பானவர் கள் மௌனமாக இருத்தல் குற்றம்செ செய்பவர்களின் அதிகரிப்புக்குக் காரணமாக அமைவதோடு சட்டம், சமாதானம் என்பவை கேள்விக்குரிய வைகளாகும் என்ற ஒரு கருத்து எதிர்காலச் சந்ததியினர்களின் மனதில் ஏற்படுத்துகின்றது.

# 14. கோன்வெல கனிஷ்ட வித்தியாலயம்- குளியாப்பிட்டி

இச்சம்பவம் நடக்கும் போது அவளது வயது எட்டு. அவள் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள்.

அக்கால கட்டத்தில் அப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிந்த ஜீ. எம். ஆரியசிங்க என்ற நபர் 2005 ஜுலை மாதம் 27ம் திகதி காலை அவளுக்கு அடித்துள்ளார். இத்தாக்குதல் காரணமாக அவள் பாரதூரமான காயங்களுக்கு உள்ளானாள்.

ஹெட்டிபொல அரசினர் ஆஸ்பத்திரியில் இருந்தும் அக்காயங்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக் கொண்டாள். இருந்தாலும் அவளது முறைப்பாட்டை வைத்தியசாலை அதிகாரிகளோ அல்லத் ஹெட்டிபொல பொலீஸாரோ ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாம் தவணைக்கான விடுமுறை முடிந்து, அதாவது 2005 ஆகஸ்ட் மாதம் 04ம் திகதி அவளது தாய் இச்சம்பவம் பற்றி அதிபரை அறிவுறுத்துவதற்காகப் பாடசாலைக்குச் சென்றார்.

அந்த அறிவுறுத்தலின் பின்பு வகுப்புக்கு வந்த ஜீ.எம். ஆரியசிங்க எனும் ஆசிரியர் மீண்டும் அவளுக்கு அடித்தார். அத்துடன் நின்றுவிடாமல் வகுப்பின் ஏனைய மாணவ மாணவிகளுக்கும் அடித்தார்.

இரண்டாவது தடவையாகவும் அவள் நோய்வாய்ப்பட்டாள். தாய் அவளைக் குளியாப்பிட்டி அரசினர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். கடும் சுகவீன நிலையிலும் கூட வைத்தியசாலையில் அவளை அனுமதித்துக் கொள்ள மறுத்து, வைத்தியர்கள் வெளி நோயாளர்கள் பிரிவின் மூலம் மருந்தைப் பெற்றுக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவத்தை அவர்கள் குறித்துக் கொள்ளவில்லை. ஆசிரியர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து வைக்கப்படுவதில்லையென்பது அவர்களது கொள்கையாக இருந்தது. அந்த மாணவியின் உடல்நிலையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. தனியார் டிஸ்பென்சரியின் மூலம் அவளது தாய் மருந்து வாங்கிக் கொடுத்தாலும் அவள் சாப்பிடவில்லை.

மீண்டும் அவள் குளியாப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அது 2005.09.18 ம் திகதி வைத்தியர்கள் நடவடிக்கைகளை மேற் கொண்டனர். ஆஸ்பத்திரியிலிருந்தும் வெளியேறிய தாயும் மகளும் மீண்டும் ஹெட்டிபொல பொலீஸ் நிலையத்துக்குச் சென்று அது சம்பந்தமாக முறையிட்டனர். அத்தடவை முறைப்பாடு எழுதப்பட்டது. பொலீஸார் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதி பெறுவதற்கான நீதிமன்றத்தில் விண்ணப்பப் படிவம் அவளுக்கு வழங்கப்பட்டத.

அந்த விணப்பப் படிவத்துடன் தாய் அவளைக் களுபோவில பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். அது 2005.09.27ம் திகதி. அன்று தொடக்கம் 2006.01.13ம் திகதி வரை அவள் களுபோவில ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றாள்.

அன்று தொடக்கம் 2009.08.30ம் திகதி வரை அவள் மாதமொரு முறை களுபோவில பெரியாஸ்பத்திரி மனநோய் பிரிவுக்குச் சென்று கொண்டிருக்கிறாள்.

ஹெட்டிபொல பொலீஸார் ஆசிரியருக்கு எதிராக 2006.03.28ம் திகதி, அதாவது 06 மாதங்களுக்குப் பின் ஹெட்டிபொல நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு சம்பந்தமான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்

கொள்வதற்காக ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தற்பொழுது மூன்று வருடங்கள் கழிந்து சென்றுள்ளது.

சட்டமா அதிபர் ஆவணங்களைத் தன் வசம் வைத்துக் கொண்டுள்ளார்.

ஆசிரியர், ஜீ. எம். ஆரியசிங்க என்ற நபர் இன்றும் ஒரு ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

குறிப்பு:

இது குற்றவாளிகளைப் பாதுகாத்துக் கொள்ளப் பொலீஸார் மற்றும் சட்டமா அதிபர், உயர் கல்வி அதிகாரிகள் போன்றவர்களுடன் வைத்தியர்களும் கூட கைகோர்த்துக் கொண்டு செயற்படல் பற்றிய நல்லதொரு உதாரணமாகும்.


## ஜனசங்சதய

உங்களுக்கு உதவ நாம் எப்போதும் தயார் நிலையில் உள்ளோம்.

*
*
*

**தொடர்பு:**

தொலைபேசி :-0382235191
பெக்ஸ் :-0382235191
ஈமெயில் :-manava@sltnet.lk.
முகவரி :-81/2, ஆதர் வி தியெஸ்
மாவத்தை
பாணந்துறை

# 15. றோயல் கல்லூரி- ஹொரண

அவன் ஹொரண றோயல் கல்லூரியில் பதினோராம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான்.

2009. மார்ச். 11ம் திகதி வழக்கம் போல் அவன் பாடசாலைக்குச் சென்றான். முதலாவது பாடத்தின் போது பாடசாலை ஊழியர் வந்து அதிபர் திரு கயசேகர அவனைக் காரியாலயத்துக்கு அழைப்பதாகக் கூறினான்.

காரியாலயத்துக்குச் சென்றவுடன் அதிபர் திரு. கயசேகரா பித்துப் பிடித்தவரைப் போய் ஒரு செல்யுலர் தொலைபேசியைக் காட்டி இது யாருடையது? என வினவினார். அது தன்னுடையதல்ல எனக் கூறியபோது ஒரு நாவிதனைப் போல் ஒரு கத்திரியை எடுத்து தலைமுடியை இடையிடையே கத்தரித்து நிலத்தில் பரத்தினார். பின்னர் மிருகத்தனமான முறையில் அவனைத் தாக்கத் தொடங்கினார்.

அவனது முகம், காது, தலை போன்ற இடங்களில் தாக்கிய அதிபர் ஜயசேகர, பாடசாலை முடியுமட்டும் அவனை முட்டுக்காலில் நிற்க வைத்தார்.

பாடசாலை முடிந்த பின்னர் அதிபர் அவனைக் காரியாலயத்துக்கு வரவழைத்து பேப்பரும் பேனாவும் கொடுத்து ஒரு மாணவியின் பின்னால் சென்றதாக எழுதுமாறு கட்டளையிட்டார்.

இத்தாக்குதல் காரணமாக அவனது காது காயமடைந்ததோடு காது கேட்பதும் குறைந்து சென்றது.

இச்சம்பவம் தொடர்பாக எல்லாப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது. பிரதமர் ரட்னசிரி விக்கிரமநாயக்கா கூட இந்த மாணவனுக்கு வேறொரு பாடசாலை பெற்றுக் கொடுக்குமாறு தேசிய பாடசாலைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளரிடம் எழுத்து மூலம் வேண்டிக் கொண்டார்.

தற்பொழுது அவன் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றுமொரு தேசிய பாடசாலையில் கல்வி கற்று வருகிறான். இருந்தாலும் குற்றவாளியான அதிபர் ஜயசேகர எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு குற்றவாளியாக இருந்தாலும் ஊழல் மோசடி போன்ற துர்நடத்தைகள் நாட்டில் இருக்கும் வரை எவருக்கும் பாதுகாப்போடு இருக்க முடியாது என்ற ஆதர்ஸத்தை இளம் சந்ததியினருக்கு அவர் இதன் மூலம் பெற்றுக் கொடுத்துள்ளார்.


## எமது தமிழ் வெளியீடுகள்:

1. பொலீஸாரும் சட்ட விதிகளும்
2. இம்சையற்ற சிறுவர் வாழ்வு
3. அமைதியின் குரல்
4. பாடசாலையிலிருந்து துஷ்பிரயோகம்... துர்நடத்தைகளை ஒழிப்போம்

ஜனசங்சதய
81ஃ2 – ஆதர் வீ தியெஸ் மாவத்தை
பாணந்துறை

"உடல் ரீதியான தண்டனை வழங்காமல்
கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையை
முன்னெடுக்க முடியாதாயின், அது
ஆசிரியரின் பலவீனத்தையே காட்டுகிறது"

ISBN: 978-955-1687-26-7

விலை RS 60 .00